TTB/2026/I/T

## 2026 ஆம் ஆண்டிற்கான தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பத்தை நிரப்புவதற்கான வழிகாட்டல்கள்

பாடசாலைக்கல்வி செயல்முறையின் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து, தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கை ஆசிரியர்களும் மாணவர்களும் இருவரின் நலனையும் கருத்தில் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, 2026 ஆம் ஆண்டிற்கான தேசியப் பாடசாலைகளில் பணியாற்றும் 396 தேசியப் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கட்டாய / வருடாந்த இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் பின்வருமாறு:

1. விண்ணப்பத்தை நிரப்பும்போது கீழ்க்கண்ட படிநிலைகளைப் பின்பற்றவும்.

1.1 விண்ணப்படிவத்தை பூரணப்படுத்த முன்னர் www.nemis.moe.gov.lk எனும் இணைப்பினூடாகதேசிய கல்வி முகமைத்துவ தகவல் மறமையினுள் (NEMIS-) தமது அடையாள அட்டையைப் பயன்படுத்தி பிரவேசித்து , அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியாவையா என்தை உறிதிப்படுத்திக்கொள்ளவும்

1.2 தமது தகவல்கள் உள்ளீடு செய்யப்படவில்லை எனின் அல்லது ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் எனின், தாம் சேவையாற்றும் பாடசலை உரித்தாகும் வலயக்கல்வி அலுவலகத்தின் NEMIS ஒருங்கணைப்பாளரை சந்தித்து உரிய ஆவணங்கள் முன்னலைப்படுத்தி தகவல்கள் ,இற்றைப்படுத்திக்கொள்ளவேண்டும்

1.3 2026.12.31 திகதிக்கு தறபோதைய பாடசலையில் சேவை க்காலம் 8 வருடங்கள் விட அதிகமாக இருந்து ,வயது 55 வருடங்கள் அல்லது அதை விடகுறைவு எனின் கட்டாயமாக இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்கவேண்டும்.

1.4 2026.07.16 திகதியிலிருந்து 2026.07.30 வரை ,இணைய வழிமூலம் விண்ணப்ப்ப்படிவத்தை ஆசிரியரே பூரணப்படுத்தி ,அதன் அச்சுப்பிரயை 2026.07.31 ம் திகதிக்கு முன்னர் அதிபரிடம் கையளிக்கவேண்டும் (by hand).

1.5 விண்ணப்ப்படிவத்தை சமர்ப்பித்த பின்னர் (Submit) மீண்டும் திருத்தங்ளை மேற்கொள்ள முடியாது என்பதால் தகவல்கள் நன்கு பரிசோதித்த பின்னர் விண்ணபடிவத்தை சமர்ப்ப்பித்தை சகல ஆசிரியர்களுக்கும் உறுதிசெய்த கொள்ளவேண்டும்.

2. விண்ண ப்படிவத்தை நிரப்புவதற்கு முன் தேசிய பாடசலைகள் ஆசிரியர் இடமாற்ற நியதிகள், , இடமாற்றத்திற்கான பாடசலைக்களின் தரங்கள் மற்றும் விண்ணப்பத்தை நிரப்புவதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை நன்கு புரிந்துகெண்டு கவனமாக செயல்படவேண்டும்.

**3.** விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன் **www.nstt.moe.gov.lk** இணையதளத்திற்குச் சென்று **"Login as a Teacher"** என்பதைக் தேர்ந்தெடுக்கவும்.

**4.** திரையில் தோன்றும் **அறிவுறுத்தல்களை வாசித்து** விளங்கிக்கொள்ளவும். அதன் பின்னர் திரையின் கீழ் தோன்றும் **"I have read and understood the guidelines above"** என்பதற்குரிய **(check box)**-இல் (√) எனும் குறியீட்டினை இட்டு, வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் படித்து புரிந்துகொண்டதை உறுதிப்படுத்தவும்.

5. உங்கள் தேசிய அடையாள அட்டை (NIC) இலக்கத்தை சரியாக உள்ளிட்டு **"Proceed"** என்பதைக் கிளிக் செய்து, உரிய விண்ணப்பப் படிவத்திற்குச் செல்லவும். இதில் **NEMIS அமைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை எண் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.**
6. இடமாற்ற விண்ணப்பப் படிவம் திறக்கப்படவில்லை என்றால், உங்கள் தகவல்கள் தேசியப் பாடசாலை ஆசிரியராக **NEMIS** அமைப்பில் பதிவு செய்யப்படவில்லை என்பதைக் குறிக்கும். அப்படியானால், நீங்கள் பணிபுரியும் பாடசாலைச் சேர்ந்த கல்வி வலய அலுவலகத்தின் **NEMIS ஒருங்கிணைப்பாளர்** அதிகாரியைச் சந்தித்து, தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து உங்கள் தகவல்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
7. இந்த விண்ணப்பப் படிவம் முதல் பக்கத்துடன் சேர்த்து மொத்தம் 5 பகுதிகளைக் கொண்டுள்ளது.

7.1 **விண்ணப்பப்படிவத்தின் இல . 1 முதல் 31 வரை Basic Information –அடிப்படை தகவல்கள்**

**குறிப்பு:** விண்ணப்பத்தை நிரப்பும் போது தானாகக் காண்பிக்கப்படும் தகவல்கள் சரியாக இல்லாவிட்டால், நீங்கள் பணிபுரியும் பாடசாலைச் சேர்ந்த கல்வி வலய அலுவலகத்தின் **NEMIS ஒருங்கிணைப்பாளரை**சந்தித்து, தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து தகவல்களைப் புதுப்பிக்க வேண்டும். அதன் பின்னர் விண்ணப்பத்தை மீண்டும் ஆரம்பத்திலிருந்து நிரப்ப வேண்டும்.

**7.1.1** இலக்கம் 1, 2, 3, 4, 5, 6, 7, 9, 11 ஆகிய தகவல்கள் **NEMIS** அமைப்பிலிருந்து தானாக வெளிப்படும். அவற்றில் 3 மற்றும் 7 ஆகியவற்றைத் தேவையானால் மாற்றலாம்.

**7.1.2** இலக்கம் 11-ல் காணப்படும் நிரந்தர முகவரியில் மாற்றம் தேவையெனில் அதைத் திருத்தவும். இலக்கம் 14, 15, 16-இல் நிரந்தர முகவரிக்கான மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவைத் தேர்ந்தெடுக்கவும். நீங்கள் நிரந்தர முகவரியில் வசிக்காமல் தற்காலிக முகவரியில் வசித்தால், இலக்கம் 12-ல் தற்காலிக முகவரியையும், மேலும் இலக்கம் 17, 18, 19-இல் அந்த தற்காலிக முவரிக்குரிய மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவையும் தேர்ந்தெடுக்கவும்.

**7.1.3** இலக்கம் 3-ல் **"வணக்கத்திற்குரிய " (Reverend) )** என்பதைத் தேர்ந்தெடுத்தால், இலக்கம் 22 முதல் 26 வரை உள்ள தகவல்களை நிரப்ப வேண்டும்.

**7.1.4** இலக்கம் 13-ன் கீழ், இந்த இடமாற்ற விண்ணப்பத்தைப் பரிசீலிக்கப் பயன்படுத்த வேண்டிய முகவரியைத் தேர்ந்தெடுக்கவும்.

**7.1.5** இலக்கம் 20-ன் கீழ், உங்கள் வாழ்க்கைத் துணைவரின் (கணவர்/மனைவி) விவரங்களை உள்ளிடவும்.

**7.1.6** இலக்கம் 21-ன் கீழ், உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால் **YES** என்பதைத் தேர்ந்தெடுக்கவும். **YES** தேர்ந்தெடுக்கப்பட்டால், பிள்ளைகளின் விவரங்களை உள்ளிட ஒரு அட்டவணை தோன்றும். அதில் உள்ள + குறியீட்டைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு பிள்ளையின் விவரங்களையும் தனித்தனியாகச் சேர்க்கலாம்.

**7.1.7** இலக்கம் 27, 28, 29 ஆகியவற்றின் கீழ் **NEMIS** அமைப்பிலிருந்து தானாகக் காண்பிக்கப்படும் தகவல்கள் இடம்பெறும்.

**7.1.8** இலக்கம் 29-ல் சேவை விவரங்கள் காண்பிக்கப்படும். அதனுடன், உங்கள் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரத்தை கிட்டிய கிலோமீட்டர் அளவில் குறிப்பிட வேண்டும்.

**7.1.9** இலக்கம் 30 மற்றும் 31 ஆகியவற்றைச் சரியாக நிரப்பிய பின், **Basic Information** பகுதியில் உள்ள அனைத்து தகவல்களையும் மீண்டும் சரிபார்க்கவும். அவை அனைத்தும் முழுமையாகவும் சரியாகவும் இருந்தால் மட்டுமே **"Are you sure that above Information is Correct"** என்பதற்கான **YES** என்பதைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் **Next Page** என்பதன் மூலம் அடுத்தப் பகுதிக்குச் செல்லவும்.

7.2 **விண்ணப்பப்படிவத்தின் இல . 31 முதல் 37 வரை –B. Additional Information மேலதிக தகவல்கள்**

**7.2.1** இலக்கம் 32-இன் கீழ், உங்கள் நியமனத்தின் தன்மையைத் தெரிவுசெய்க.

**7.2.2** இல 33-இன் கீழ், கடந்த 05 ஆண்டுகளுக்கான (2022–2026) உங்கள் பாடக் கற்பித்தல் கால அட்டவணைக்கு ஏற்ப விவரங்களை பூர்த்தி செய்யவும். பாடத்தை **ஆரம்பக் கல்வி (Primary)** எனத் தேர்ந்தெடுத்தால், நீங்கள் கற்பிக்கும் தரத்தை சரியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**7.2.3** இலக்கம் 36-இன் கீழ், புதிய கல்வி மறுசீரமைப்புகளுக்கான பயிற்சியைப் பெற்றிருந்தால் **"YES"** என்பதைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் தோன்றும் அட்டவணையில் **பாடத்தையும் கற்பித்தல் மொழியையும்** தேர்ந்தெடுக்கவும்.

**7.2.4** நீங்கள் ஏதேனும் ஒரு பாடத்திற்காக ஆசிரியர் கல்வியற் கல்லூரி அல்லது வேறு தொழில்முறைப் பயிற்சி பெற்றிருந்தால் மட்டுமே **இலக்கம் 34**-இன் கீழுள்ள பகுதியை பூர்த்தி செய்யவும்.

**7.2.5** நீங்கள் பட்டப்படிப்பை முடித்திருந்தால் மட்டுமே **இலக்கம் 35**-இன் கீழுள்ள பகுதியை பூர்த்தி செய்யவும்.

**7.2.6** இலக்கம் 37-இன் கீழ், நீங்கள் சம்பளம் பெறும் பாடசாலையைத் தவிர வேறு பாடசாலை அல்லது நிறுவனத்திற்கு இணைக்கப்பட்டு (Attached) பணியாற்றி வந்தால், அதற்கான பெட்டியில் **"Yes. Attached"** என்பதைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் அதற்குக் கீழுள்ள துணைப் பகுதிகளை சரியாக பூர்த்தி செய்யவும். உங்கள் இணைப்பு (Attachment) தொடர்பான அனைத்து விவரங்களையும் உள்ளிட போதிய இடம் இல்லையெனில், கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை வடிவில் விவரங்களை நிரப்பி, விண்ணப்பத்துடன் இணைத்து அதிபரிடம் ஒப்படைக்கவும்.

| **மாகாணம்** | **வலயம்** | பாடசலை | **இணைப்பு காலம்** | | இணைப்பு வழங்கப்பட்ட காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | **திகதி முதல்** | திகதி வரை | |
| | | | | | |

**7.2.7 "Additional Information"** பகுதியில் உள்ள தகவல்கள் சரியானவையா என்பதை மீண்டும் சரிபார்க்கவும். அனைத்து தகவல்களும் முழுமையாகவும் சரியாகவும் இருந்தால் மட்டுமே **"Next Page"** என்பதைக் கிளிக் செய்து அடுத்தப் பக்கத்திற்குச் செல்லவும்.

**7.3** **விண்ணப்பப்படிவத்தின் இல . 38முதல் 40 வரை C-Transfer Request–இடமாற்ற கோரிக்கை**

**7.3.1** இலக்கம் 38-இன் கீழ், நீங்கள் விண்ணப்பிக்கும் இடமாற்றத்தின் வகையைத் தேர்ந்தெடுக்கவும்.

**7.3.2** ஒரு தேசியப் பாடசாலையிலிருந்து மற்றொரு தேசியப் பாடசாலைக்கு இடமாற்றம் கோரினால், **(இலக்கம் 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கவனமாகப் பரிசீலித்த பின் இந்தப் பகுதியை நிரப்ப வேண்டும்.)** பொருத்தமான பாடசாலை வகையைத் தேர்ந்தெடுத்த பின், நீங்கள் விரும்பும் தேசியப் பாடசாலைகளில் அதிகபட்சம் 05 பாடசாலைகளைத் தெரிவுசெய்யலாம். குறைந்தபட்சம் 02 தேசியப் பாடசாலைளை தெரிவுசெய்வது கட்டாயமாகும். (பாடசாலையின் பெயரை **Search** செய்து தேர்ந்தெடுக்கலாம்.) இடமாற்றம் வழங்கும் போது, நீங்கள் குறிப்பிட்டுள்ள

பாடசாலைகளின் **முன்னுரிமை** வரிசையும், அந்தப் பாடசாலைகளில் உங்கள் பாடத்திற்கான **வெற்றிடங்களும்** கருத்தில் கொள்ளப்படும். நீங்கள் தேர்ந்தெடுத்த தேசியப் பாடசாலையும் அதன் முகவரியும் சரியாக உள்ளனவா என்பதை மீண்டும் சரிபார்க்கவும். நீங்கள் தெரிவுசெய்யும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் முகவரியிலிருந்து (இலக்கம் 13-ல் குறிப்பிடப்பட்ட முகவரி) ஒவ்வொரு பாடசாலைக்கும் உள்ள கிட்டிய தூரத்தை (கிலோமீட்டரில்) குறிப்பிடுவது கட்டாயமாகும்.

**7.3.3** **தேசியப் பாடசலையிலிருந்து மாகாணப் பாடசலைக்கு** இடமாற்றம் கோருகின்றீர்களானால், பொருத்தமான பாடசலை வகையைத் தேர்ந்தெடுத்த பின், இடமாற்றம் கோரும் மாகாணத்தையும் அதற்குட்பட்ட மாகாணப் பாடசாலைகளையும் தேர்ந்தெடுக்கவும். மாகாணப் பாடசலைகள் அதிகபட்சம் **05** வரை குறிப்பிடலாம். (பாடசலையின் பெயரை Search செய்து தேர்ந்தெடுக்கலாம்.) குறைந்தது **02 மாகாணப் பாடசலைகளை** குறிப்பிடுவது கட்டாயம். உங்களை மாகாணரை அரசசேவைக்கு விடுவிக்க பரிந்துரைக்கப்பட்டால், தேவையான ஆவணங்களை ஒப்படைத்த பின்னர், சம்பந்தப்பட்ட மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படும். அதன் பின்னர் வழங்கப்படும் பாடசாலையை பற்றிய இறுதி முடிவை அந்த மாகாண அரசசேவைகள்ஆணைக்குழுவே தீர்மானிக்கும்.

**7.3.4** **தேசியப் பாடசலையிலிருந்து தேசியப் பாடசாலைக்கும், மாகாணப் பாடசாலைக்கும்** ஆகிய இரண்டிற்கும் இடமாற்றம் கோருகின்றீர்களானால், பொருத்தமான பாடசலை வகையைத் தேர்ந்தெடுத்த பின், அதிகபட்சம் **05 தேசியப் பாடசாலைளையும் 05 மாகாணப் பாடசாலைகளையும்** குறிப்பிடலாம். (பாடசலையின் பெயரை Search செய்து தேர்ந்தெடுக்கலாம்.) குறைந்தது **02 தேசியப் பாடசலைகளும் 02 மாகாணப் பாடசாலைகளும்** குறிப்பிடப்பட வேண்டும். இடமாற்றம் வழங்கும்போது தேசியப் பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அதற்கான பரிந்துரைகள் **7.3.1.1**-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும். மாகாண அரசுப் பணிக்கு விடுவிப்பதற்கான பரிந்துரைகள் **7.3.1.2**-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.

**7.4** 2026.12.31 அன்று, நீங்கள் ஒரே தேசியப் பாடசாலையில் **08 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல்** (அதாவது, 2018.12.31-க்கு முன் அந்தப் பாடசாலையில் சேர்ந்திருந்தால்) பணியாற்றியிருந்தால், மேலும் 2026.12.31 அன்று உங்கள் வயது **55 ஆண்டுகளுக்கு குறைவாக** இருந்தால், கட்டாய இடமாற்றத்திற்கு உட்படுவீர்கள். எனவே, **இலக்கம் 39**-இன் கீழ் இடமாற்றக் கோரிக்கைக்கான காரணம் தானாகவே நிரப்பப்படும்.

**7.5** வருடாந்த இடமாற்றத்தின் **கீழ் வேறு காரணத்திற்காக இடமாற்றம் கோரும் ஆசிரியராக** இருந்தால், **இலக்கம் 39**-இன் **கீழ் நீங்கள் இடமாற்றம் கோருவதற்கான காரணத்தை சரியாகத் தேர்ந்தெடுக்கவும்.** காரணமாக **Medical Reason** என்பதைத் **தேர்ந்தெடுத்தால், அச்சிடப்பட்ட** விண்ணப்பப் பிரதியுடன் பள்ளிக்கு அனுப்பப்பட்டுள்ள **TTB/2026/05** படிவத்தை **பூர்த்தி செய்து** விண்ணப்பத்துடன் **இணைத்து** அதிபரிடம் ஒப்படைக்க **வேண்டும். இந்தப் படிவத்தை www.nstt.moe.gov.lk** இணையதளத்தில் **Instructions** என்ற பகுதியில் **இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.**

**7.6** **இலக்கம் 40**-இன் கீழ், விண்ணப்பத்தில் ஏற்கனவே வழங்கிய தகவல்களுக்கு மேலாக சேர்க்க வேண்டிய தகவல்கள் **இருந்தால், அவற்றை மிகவும் சுருக்கமாக குறிப்பிடவும்.**

7.7 நீங்கள் உள்ளிட்ட தகவல்களை முழுமையாக **மீண்டும் சரிபார்த்து அவை சரியானவை** என உறுதிப்படுத்திய பின் **Next Page** என்பதைக் **கிளிக் செய்து அடுத்தப் பக்கத்திற்கு** செல்லவும். பின்னர்,

"I hereby declare that the information and particulars given above are true and accurate and there are no disciplinary or/and investigation proceedings or/and audit queries. I further acknowledge that mentioning false or misleading information is an offense subject to a disciplinary penalty."என்ற அறிவிப்பை ஏற்று, அதன் பிறகு **Submit Application** என்பதைக் கிளிக் செய்து விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

**8.** அதன் பின்னர் **"Your Teacher Transfer Application is Pending for Principal's Recommendation"** என்று காட்சியளித்தபின் , கீழே காணப்படும் **"Download Application"** என்பதைக் கிளிக் செய்து, உங்கள் விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

**9.** பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அச்சிட்டு எடுத்த பின், விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் விவரங்களை குறிப்பிட்டு, கையொப்பமிட்டு, அதனை பாடசலை அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**10.** அந்த விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட ஒரு பிரதியில் திகதி மற்றும் கையொப்பமிட்டு, விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாளான **2026.07.31** அல்லது அதற்கு முன்னர், விண்ணப்பதாரர் தாமாகவே தாம் பணிபுரியும் பாடசாலையின் அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியுடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள் பின்வருமாறு:

**10.1** ஆசிரியரின் முதல் நியமனக் கடிதத்தின், அதிபரால் சான்றளிக்கப்பட்ட பிரதி.

**10.2** தற்போதைய பணியிடத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட கடிதத்தின், அதிபரால் சான்றளிக்கப்பட்ட பிரதி.

**10.3** 2026 ஆம் ஆண்டிற்கான தனிப்பட்டநேரசுசி, அதிபரால் சான்றளிக்கப்பட்ட பிரதி.

**10.4** நியமனப் பாடத்திற்கு அப்பாற்பட்ட பாடங்களை கற்பித்து வந்தால், அதற்கான உயர்ந்த கல்வி / தொழில்முறை தகுதிச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள்.

**10.5** மருத்துவக் காரணங்களை முன்வைக்க வேண்டுமாயின், அரச மருத்துவமனை அல்லது பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனை அல்லது நோயாளிக்கு சிகிச்சையளிக்கும் நிபுணர் மருத்துவர் பரிந்துரைத்த **TTB/2026/05** படிவம்.

**10.6** **TTB/2026/I/T** வழிகாட்டல் கையேட்டின் **7.2.6** ஆம் பிரிவின்படி, அனைத்து இணைப்புத் தகவல்களையும் விண்ணப்பத்தில் பதிவு செய்ய போதுமான இடம் இல்லாவிட்டால், அதிபரால் சான்றளிக்கப்பட்ட இணைப்புத் தகவல் படிவம்.

**10.7** மதஸ்தலப் பொறுப்பில் (விகாராதிபதி, தேவாலயப் பங்குத்தந்தை போன்றோர்) பணியாற்றுவதாக உறுதிப்படுத்தும் சான்றிதழின் உண்மைப் பிரதியின் சான்றழிக்கப்பட்ட படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.

**10.8** வேறு நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டு கடமையாற்றி வந்தால், கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம்.

**10.9** வெளிநாட்டு விடுப்பு அங்கீகரிக்கப்பட்டிருந்தால், கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம்.

**11.** புதிய தேசியப் பாடசலை ஆசிரியர்களுக்கு (**இணைப்பு 01**) 2026 ஆம் ஆண்டிற்கான தேசியப் பாடசாலைகளின் கட்டாய / வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும். மேலும், தேசியப் பாடசாலைகளில் பணியாற்ற சம்மதம் தெரிவிக்கும் எழுத்து மூல ஒப்புதல், தனிப்பட்ட சேவை கோப்பில் கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**12. பொதுவான விடயங்கள்**

**12.1** எந்நேரத்திலும், உங்கள் தேசிய அடையாள அட்டை (NIC) எண்ணைப் பயன்படுத்தி **www.nstt.moe.gov.lk** இணையதளத்தில் உள்நுழைந்து, இடமாற்ற விண்ணப்பத்தின் தற்போதைய நிலையைப் பரிசோதிக்கலாம்.

**12.2** விண்ணப்பத்தை பூர்த்தி செய்து **Submit** செய்ய ஒரே ஒரு முறை மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

**12.3** விண்ணப்பத்தை நிரப்பும் போது, மேற்கண்ட விடயங்களுக்கு அப்பாற்பட்ட தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏதேனும் ஏற்பட்டால், அலுவலக நேரங்களில் **011-2075854** அல்லது **011-2784434** என்ற தொலைபேசி எண்களுக்கு தொடர்புகொண்டு அறிவிக்கலாம்.

**13.** 2026 ஆம் ஆண்டிற்கான தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றுச் செயல்முறையுடன் தொடர்புடைய நியதிகள் , பாடசாலை வகைப்படுத்தல், வழிகாட்டுதல்கள், இடமாற்றுத் தீர்மானங்கள், மேன்முறையீட்டு தீர்மானங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றுப் பிரிவின் ஊடாக பாடசாலை அதிபர்களின் மூலம் அறிவிக்கப்படும். எனவே, இவ்விடயங்களுக்கான அனைத்து அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கங்களை தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றுப் பிரிவின் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும்.

**14.** தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்று தொடர்பான அனைத்து தீர்மானங்களும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலை ஆசிரியர் இடமாற்றுப் பிரிவின் **nstt.moe.gov.lk** எனும் (Portal) இணையத்தளத்தின் மூலம் மட்டுமே வெளியிடப்படும். ஆகையால், தங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தி, அந்த மூலம் மட்டுமே தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**ஒப்பம் ஏ. ஜே. எஸ். எஸ். எதிரிசூரிய**
**மேலதிக செயலாளர் (தாபனம்)**
**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**